1972 சனவரி 28]

இராதாபுரம் துணை வட்டம்

*** 80 வினு.—திரு. டி. கணபதி :** *மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் துணை வட்டத்தைத் தனி வட்டமாக உயர்த்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆமெனில், எப்பொழுது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : *(அ) இல்லை.*

(இ) கேள்விக்கு இடமில்லை.

கோயில் நிலங்களுக்கு உச்சவரம்பு

*** 81 வினு—திரு. ந. சோமசுந்தரம்:** *மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—*

தமிழகத்தில் உள்ள கோயில், மடம் இவைகளுக்குச் சொந்தமான நிலங்களுக்கு உச்சவரம்பு விதிக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ சண்முகம்: *தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 58/1961), 2, 73-வது பிரிவுகள், பொதுத் தன்மை வாய்ந்த சமயப் பொறுப்புக் கழகங்களாலும், பொதுத் தன்மை வாய்ந்த ஓர் அறக்கட்டளை அல்லது கல்வி நிறுவனத்தாலும் வைத்திருக்கப்படுகிற நிலங்களுக்கு மேற்படிச் சட்டத்தின் விதித்துறைகள் பொருந்துவதிலிருந்து விலக்கு அளிக்கின்றன.*

மேற்படிச் சட்டத்தில் அடங்கியுள்ள பல்வேறு விலக்குகள் தொடர்ந்து நீடிக்க வேண்டுமா, வேண்டாமா என்பது குறித்து ஆய்வு செய்வதற்காக, சட்டமன்ற இரு அவைகளின் உறுப்பினர்களைக் கொண்ட இணைக்குழு ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.

திரு. ந. சோமசுந்தரம் : *தலைவரவர்களே, இந்தக் குழு தன் பணியை எப்பொழுது தொடங்கி, எவ்வளவு காலத்திற்குள்ளாக அந்தப் பரிசீலனையை முடிக்கும் என்று அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?*

மாண்புமிகு திரு. ப உ. சண்முகம்: *தலைவரவர்களே, சமீபத்தில் அந்தக் குழு கூடி மனை நிலங்களுக்கு உச்சவரம்பிலிருந்து விலக்கு அளித்திருப்பதை நீக்குவது என்று தீர்மானித்திருக்கிறது.*

திரு ஆ. கு. சுப்பையா: *தலைவரவர்களே, கோயில், மடங்களுக்கு உள்ள சாகுபடி நிலங்கள் முறையாகச் சாகுபடி செய்யப்படுவதில்லை. சாகுபடியாளரிடமிருந்து சரியாக வரவு செலவு செய்ய முடியாமல் இருக்கிறது. ஆகவே, கோயிலுக்கும்,*